


# தன்னம்பிக்கை மலரும்!




ஒரு பெண்ணின் லட்சியத்தைச் செதுக்கியுள்ளது "கண்ணில் ஓர் காவியம்" நாவல்.

ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த, படித்த பெண்ணான மீனா, ஆணாதிக்க சமுதாயத்தின் கொடுமைகளைத் தகர்த்து எப்படி சாதனை விளக்காக ஒளிர்கிறாள் என்பதை உணர்ச்சிபூர்வமாகக் கூறியுள்ளார் நாவலின் ஆசிரியர் டாக்டர் ஏ.பி.சாமி. வாழ்க்கைச் சூழ்நிலையால் கண்களையும் இழந்த மீனா, ஊனத்தைப் பொருட்படுத்தாமல் தனது செயல்களால் பல சிகரங்களைத் தொடுகிறாள்.

இந்த நாவலைப் படித்து முடிக்கையில் மீனாவுடன் நெருங்கிப் பழகும் ஒருவராகவே நாம் ஆகிவிடுகிறோம். மீனா செல்லும் நாடுகளுக்கு எல்லாம் நாமும் செல்வதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. அவருடன் பழகும் விஞ்ஞானிகளும், இலக்கியவாதிகளும், சிந்தனையாளர்களும் நம்முடனும் இரண்டறக் கலந்துவிடுகிறார்கள். ஒரு பெருங்கதையினிடையே சிறுகதைகளைப் புகுத்தியிருக்கும் விதமும் வித்தியாசமாக இருக்கிறது. ஈழத்தமிழரின் துயரமும், போர்க் குரலும் இந்நூலில் ஒலிப்பது மற்றொரு சிறப்பு.

660க்கும் மேற்பட்ட பாத்திரங்களைக் கையாண்ட விதத்தில் ஆசிரியரின் கடும் உழைப்பு தெரிகிறது. மேல்நாட்டு எழுத்தாளர் ஹென்றி ஷெரியரின் "பாப்பிலோன்" என்ற உண்மைக் கதையில் வருகின்ற நிகழ்வுகளை நாவலின் சில தருணங்கள் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. "கண்ணில் ஓர் காவியம்" நாவலைப் படிப்பவர்களுக்கு ஊனமுற்றவர்களின் மீது நல்லெண்ணம் தோன்றும். இந்நாவலை ஊனமுற்ற சகோதர, சகோதரிகள் படித்தால் அவர்களுக்குள் தன்னம்பிக்கை மலரும். அந்த வகையில் நாவலை உருவாக்கிய டாக்டர் ஏ.பி. சாமிக்கு சபாஷ் போடலாம்.

***கண்ணில் ஓர் காவியம்,***
***ஆசிரியர்: டாக்டர். ஏ.பி. சாமி,***
***விலை:ரூ. 300. பக்கம்:952.***
***வெளியீடு: டாக்டர் மீனா பதிப்பகம்,***
***1864 ஏ-1, திருச்சி ரோடு,***
***இராமநாதபுரம்,***
***கோவை-641045.***

# கேட்காமல் பெறும் முத்தம்!

இதயத்தை வருடும் அழகழகான காதல் கவிதைகள் நிறைந்த தொகுப்பு 'தரிசன வேட்கை'. காதல் கவிதைகள் என்றாலும் பிதற்றல்கள் இல்லை. புரியாத வண்ணம் கடினமான வடிவமும் இல்லை. எளிதாகப் புரியும் விதத்தில், நல்ல தரத்துடன் ஒவ்வொரு கவிதையையும் தனது பேனாவிலிருந்து பிரசவித்துள்ளார் ஸ்ரீதர் என்றழைக்கப்படும் தொ.ரா.ஸ்ரீ.

*"கையில் கேட்டது முத்தம்*
*அவளோ கன்னத்தில் தந்தாள் முத்தம்*
*அவளிடம் நேரில்*
*கேட்டுப் பெறும் முத்தத்தை விட*
*அவளிடம் சொல்லாமல் கேட்காமல்*
*பெறும் முத்தம்*
*சுலபமாகவும் இருக்கிறது*
*இதுவும் சுகமளிக்கிறது" என்று சொல்லி*
*காதல் பரவசத்தை ஏற்படுத்துகிறார்*
*கவிஞர்.*
*இன்னொரு கவிதையில்,*
*"தினங்களின் மேல்*
*நிறம் பூசுகிறாய்*
*நிறம் எது எது என்று*
*அன்றன்று தான் முடிவாகிறது*
*உனதாடை பச்சை என்றால்*
*அன்றைய ஏனைய பொழுதெல்லாம்*
*பச்சையே என்னை ஆள்கிறது*
*உனதாடை*
*மஞ்சள் என்றால்*
*அன்றைய ஏனைய*
*பொழுதெல்லாம்*
*மஞ்சளே என்னை*
*ஆள்கிறது*
*அந்நிற கண்ணாடி அணியாமலே*
*அந்நிறத்தில்தான் வானம் தெரிகிறது*
*அந்நிற கண்ணாடி அணியாமலே*
*அந்நிறத்தில்தான் கடல் பார்க்கப்படுகிறது"*




என்று காதலில் கவிதை வரிகளை உருக வைத்துள்ளார் கவிஞர் தொ.ரா.ஸ்ரீ. சிறந்த திரைப்பட இயக்குனராக வேண்டும் என்ற லட்சியத்தில் இயங்கி வரும் தொ.ரா.ஸ்ரீ., தமிழ் சினிமாவின் கதை, திரைக்கதை விவாதங்களில் பங்கெடுத்து வருபவர். திரையுலகில் தன்னை நிரூபிப்பார் என்ற நம்பிக்கையை அவருடைய கவிதை வரிகள் ஏற்படுத்துகின்றன. காதலன் காதலிக்கும், காதலி காதலனுக்கும் அன்புப் பரிசாக வாங்கி அளிக்கத் தகுதியான நூல் 'தரிசன வேட்கை'.

***தரிசன வேட்கை,***
***ஆசிரியர்: தொ.ரா.ஸ்ரீ.***
***விலை: ரூ. 40.***
***பக்கம்: 80.***
***வெளியீடு: வளர்பிறை,***
***56, ஹபிபுல்லா சாஹிப் தெரு,***
***திருவல்லிக்கேணி,***
***சென்னை– 600005 .***